செய்தி வெளியீடு எண். 809 நாள்.08.11.2009

இன்று (8.11.2009) சென்னையில் இத்தாலி நாட்டில் பிறந்து தமிழகத்தில் வாழ்ந்த தமிழறிஞர் வீரமாமுனிவர் அவர்களின் 330 வது பிறந்த நாளையொட்டி, சென்னை காமராசர் சாலையில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி , மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.த.மோ.அன்பரசன் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்வில்அருட்தந்தை டாக்டர் சின்னப்பா, சிறுபான்மை நல ஆணையத் தலைவர் திரு.வின்சென்ட் சின்னதுரை, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு.சி.காமராஜ்,இ.ஆ.ப., மற்றும் பல்வேறு திருச்சபைகளின் போதகர்கள், லயோலா கல்லூரி பேராசிரியர்கள், செய்தித் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.